செ.வெ.எண்.399 நாள்.15.09.2023

# செங்கல்பட்டு மாவட்டம், அலிசன் காசி மேல்நிலைப் பள்ளியில் மகளிர் பயன்பெறும் வகையில், மாதந்தோறும் ரூ.1000/– வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் துவக்கி வைத்தார்.

--------

செங்கல்பட்டு மாவட்டம், அலிசன் காசி மேல்நிலைப் பள்ளியில் மகளிர் பயன்பெறும் வகையில், மாதந்தோறும் ரூ.1000/– வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.ஆர்.பாலு அவர்கள் மற்றும் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.க.செல்வம் அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஆ.ர.ராகுல் நாத், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் இன்று (15.09.2023) துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது :

2021ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலின்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/– வழங்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் அறிவித்தார். தமிழக சட்டப்பேரவையில், 2023–2024–ம் ஆண்டுக்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட போது, குடும்ப தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 உரிமைத் தொகை வழங்கும் திட்டத்திற்கு ரூ.7 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இந்த திட்டம் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் தேதி தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இன்றைய தினம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் காஞ்சிபுரம் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் வெகு சிறப்பாக தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, நமது செங்கல்பட்டு மாவட்டத்தில் இன்றைய தினம், தகுதி வாய்ந்த 2000 பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.1000/– பெற்றிட பயனாளர் அட்டைகள் வழங்கப்படுகிறது.

செங்கல்பட்டு மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக 658 முகாம்கள் கடந்த 24.07.2023 முதல் 13.08.2023 வரை இரண்டு கட்டங்களாக நடைபெற்ற 1,061 முகாம்களில் 4 லட்சத்து 95 ஆயிரத்து 72 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. பின்னர், சமூக பாதுகாப்பு ஓய்வூதியம் பெறுவோர், மாற்றுத்திறனாளி உதவித்தொகை பெறுவோரின் குடும்பத்தை சேர்ந்த பெண்களும் இத்திட்டத்தில் விண்ணப்பிக்கலாம் என்று முதல்வர் அறிவித்ததைத் தொடர்ந்து, மேலும் மேற்படி முகாம்களில் விடுபட்ட நபர்களுக்கும், ஓய்வூதியம் பெறும் நபர்களுக்கும் சிறப்பு முகாம்கள் கடந்த 18.08.2023 முதல் 20.08.2023 வரை நடத்தப்பட்டு 23,480 விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

பிறகு, வருமான வரி, வாகனப் பதிவு, மின் இணைப்பு உட்பட அரசிடம் இருந்த தகவல் தரவுகளுடன், விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் ஒப்பிடப்பட்டன. போதிய விவரங்கள் கிடைக்காதது மற்றும் சந்தேகம் உள்ள விண்ணப்பங்கள் தொடர்பாக கள அலுவலர்கள் ஆய்வு நடத்தி, தகவல்களை சரிபார்த்தனர்.

மாதாமாதம் அவர்களது வங்கி கணக்கிலேயே இத்தொகை செலுத்தப்படும் என்பதால், பயனாளிகளின் வங்கி கணக்கை சரிபார்க்கும் பணிகள் நடைபெற்றது. இதற்காக அவர்களது வங்கிக் கணக்கில் ரூ.1 அனுப்பப்பட்டு, தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, வங்கிக் கணக்குக்கு பணம் வந்தடைந்த தகவலை உறுதி செய்யப்பட்டது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் முன்னோடி திட்டங்களான ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, பெண்களுக்கு சொத்தில் சம உரிமை, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், கலைஞர் வீடு வழங்கும் திட்டம் கலைஞர் காப்பீட்டு திட்டம் தமிழகம் முழுவதும் சிட்கோ சிப்காட் தொழிற்பேட்டைகள் என பல்வேறு முற்போக்கு சிந்தனை கொண்ட திட்டங்கள் அனைத்து தரப்பு மக்களுக்கும் சென்று பயனடையும் வகையில் செயல்படுத்தப்பட்டு பயனடைந்தனர்.

தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இரண்டு ஆண்டு ஆட்சியில், மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணம், நகை கடன் தள்ளுபடி, மகளிர் சுய உதவி குழு கடன் தள்ளுபடி, பயிர் கடன் தள்ளுபடி, தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு திட்டம், மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை என பல்வேறு செயற்கரிய திட்டங்களை இன்று வரையில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இதில், தமிழகம் முழுவதும் 14 லட்சத்து 52 ஆயிரம் ஏழை எளிய மக்கள் வாங்கிய ரூபாய் 5 ஆயிரத்து 13 கோடி 5 சவரன் வரையிலான நகை கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. செங்கல்பட்டு மாவட்டத்தை பொறுத்தவரை ரூபாய் 74 கோடியே 6 லட்சம் தள்ளுபடி செய்யப்பட்டு 15,584 ஏழை எளிய மக்கள் பயன் பெற்றனர்.

இதேபோன்று, மகளிர் சுய உதவி குழுக்கள் வாங்கிய கடன் தள்ளுபடி திட்டத்தின் கீழ், தமிழகம் முழுவதும் ஒரு லட்சத்து 17 ஆயிரத்து 617 மகளிர் சுய உதவிக் குழுக்கள் வாங்கிய ரூபாய் 2756 கோடி கடன் தள்ளுபடி 15 லட்சத்து 88 ஆயிரத்து 39 மகளிர் பயன் அடைந்தனர். செங்கல்பட்டு மாவட்டத்தை பொறுத்தவரை 1109 மகளிர் சுய உதவிக் குழுக்கள் வாங்கிய ரூபாய் 29 கோடியே 41 லட்சம் கடன் தள்ளுபடி செய்யப்பட்டு 12,486 மகளிர் பயனடைந்தனர். கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய பயிர் கடன் தள்ளுபடி திட்டத்தின் கீழ் தமிழகம் முழுவதும் 16 லட்சத்து 43 ஆயிரத்து 347 விவசாயிகளுக்கு ரூபாய் 12,489 கோடி மதிப்பிலான பயிர் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. செங்கல்பட்டு மாவட்டத்தை பொறுத்தவரை 17 ஆயிரத்து 227 விவசாயிகள் வாங்கிய ரூபாய் 123 கோடியே 24 லட்சம் பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

பெண்கள் முன்னேற்றத்திற்கு பெண்களுக்கு சொத்தில் சம உரிமை, உள்ளாட்சி அமைப்புகளில் மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு, அரசு பணிகளில் பெண்களுக்கு 30 சதவீத ஒதுக்கீட்டில் இருந்து 40% உயர்வு, காவல் துறையில் பெண் காவலர்கள் நியமனம், கோயில் அறங்காவலர்களாக பெண்கள் நியமனம், தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியர்கள் மகளிர் மட்டும் நியமனம், அரசு பெண் பணியாளர்களுக்கு பேறு கால விடுமுறை ஒரு வருடமாக உயர்வு, மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் கர்ப்பிணி பெண்களுக்கு ரூபாய் 6000 வழங்கப்பட்டது, தற்போது 18 ஆயிரம் ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது, பெண்களின் பெயரில் இலவச வீட்டு மனை பட்டா, பெண்களுக்கு இலவச பேருந்து பயண திட்டம், அனைத்து மாவட்டங்களிலும் அரசு துறையில் பணியாற்றும் மகளுக்கு விடுதிகள், அரசு பள்ளியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் வழங்கும்

புதுமைப் பெண் திட்டம், அங்கன்வாடி மைய உதவியாளர் மற்றும் பணியாளர் பணியிடங்களில் 25 சதவீத பணியிடங்கள் விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டோருக்கு ஒதுக்கீடு, அங்கன்வாடி மையங்களில் பணிபுரியும் உதவியாளர் ஓய்வு வயது 60 ஆக உயர்வு, அனைத்து மாவட்டங்களிலும் கருவுற்ற தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சிகள், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் ஒதுக்கப்படும் வீடுகள் பெண்கள் பெயரில் வழங்க உத்தரவு என எண்ணற்ற திட்டங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மகளிரின் முன்னேற்றத்திற்காகவே செயல்படுத்தியுள்ளார். இத்திட்டங்களை பொதுமக்கள் பயன்படுத்தி தங்கள் வாழ்க்கையில் வளம்பெற வேண்டும் என்று மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர்.ராஜா, பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.இ.கருணாநிதி, செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திருமதி.வரலட்சுமி மதுசூதனன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.அரவிந்த் ரமேஷ், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.எஸ்.பாலாஜி, சார் ஆட்சியர் திரு.லட்சுமிபதி, இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.பி.சுபா நந்தினி, தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி.வசந்தகுமாரி கமலக்கண்ணன், துணை மேயர் திரு.காமராஜ், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.செம்பருத்தி துர்கேஷ், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.ஆனந்த் குமார் சிங், இ.ஆ.ப., சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.சாகிதா பர்வின், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திரு.இதயவர்மன், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.உதயா கருணாகரன், செங்கல்பட்டு நகராட்சி நகர்மன்ற தலைவர் திருமதி.தேன்மொழி நரேந்திரன், மறைமலைநகர் நகராட்சி நகர்மன்ற தலைவர் திரு.சண்முகம், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், செங்கல்பட்டு மாவட்டம்.**